# முதல் நாள் மெட்ரோ ரயில் சேவை: 5,033 பேர் பயணம்

**சென்னை, செப். 8:** சென்னையில் மெட்ரோ ரயில் சேவையின் முதல் நாளில் 5,033 பேர் பயணம் செய்துள்ளதாக, மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், பரங்கிமலை–சென்ட்ரல் இடையே மெட்ரோ ரயில் சேவை புதன்கிழமை தொடங்கவுள்ளது.

சென்னையில் 168 நாள்களுக்குப் பிறகு மெட்ரோ ரயில் சேவை கடந்த திங்கள்கிழமை தொடங்கியது. முதல் கட்டமாக, விமான நிலையத்தில் இருந்து வண்ணாரப்பேட்டைக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டன.

முதல் நாளில், மெட்ரோ ரயில்களில் பயணிக்க குறைந்த அளவில் பயணிகள் பயணம் செய்தனர். பயணிகள் அனைவரும் மெட்ரோ ரயில் நிலையத்தின் நுழைவு வாயிலில் உடல்வெப்பநிலை பரிசோதனை கருவி மூலமாக பரிசோதிக்கப்பட்டனர். தொடர்ந்து, நிலையத்தின் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். மெட்ரோ ரயில்நிலையத்திலும், மெட்ரோ ரயிலிலும் சமூக இடைவெளி பின்பற்றி அறிவுறுத்தப்பட்டனர். முகக்கவசம் அணியாத பயணிகள் மெட்ரோ ரயிலில் பயணிக்க அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில், மெட்ரோ ரயில் சேவையின் முதல் நாளில், 5,033 பேர் பயணம் செய்ததாக மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது. இவர்களில் 4,869 பேர் ஸ்மார்ட் கார்டு பயன்படுத்தி பயணம் செய்தனர். இதுதவிர, 164 பேர் கியூ ஆர் குறியீடு முறையில் பயணச்சீட்டு பெற்று பயணம் செய்தனர். மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள டிக்கெட் மையங்களில் வரிசையில் நிற்பதை தவிர்க்க கியூஆர் குறியீடு முறையில் பயணச்சீட்டு பெற்று பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**பயணிகள் வருகை:** முதல்நாளில் பயணிகள் வருகை குறைவாக இருந்ததற்கு, ஐடி ஊழியர்கள் உள்பட பல்வேறு துறையை சேர்ந்த ஊழியர்கள் வீடுகளில் இருந்து பணியாற்றுவது, கல்வி நிறுவனங்கள் இயங்காதது போன்றவை காரணமாக தெரிவிக்கப்படுகிறது. மெட்ரோ ரயில் பயணிகளின் எண்ணிக்கை படிப்படியாக உயரும் என்று மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பரங்கிமலை–சென்ட்ரல் மெட்ரோ:** பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம் வரை மெட்ரோ ரயில் சேவை புதன்கிழமை (செப்.9) தொடங்குகிறது. பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு, கோயம்பேடு வழியாக சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தை அடைகிறது.

அலுவலக நேரமான (நெரிசல்மிக்க நேரம்) காலை 8.30 மணி முதல் காலை 10.30 வரையும், மாலை 5 மணி முதல் இரவு வரையும் 5 நிமிஷ இடைவெளியிலும், நெரிசல் அல்லாத நேரங்களில் 10 நிமிஷ இடைவெளியிலும் ரயில்கள் இயக்கப்படுகின்றன.

பயணிகள் பாதுகாப்புக்காக, அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களும் மெட்ரோ ரயில்களும் அடிக்கடி கிருமிநாசினி மூலம் சுத்தம் செய்யப்படுகிறது. சுத்தமான காற்று சுழற்சியை அதிகரிக்கவும், தனிமனித இடைவெளியைப் பின்பற்றி பயணிகள் மெட்ரோ ரயிலில் ஏறவும் இறங்கவும் மெட்ரோ ரயில் நிலையங்களில் மெட்ரோ ரயில்கள் நிறுத்தப்படும் நேரம் 20 விநாடிகளில் இருந்து 50 விநாடிகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

கரோனா நோய்த்தொற்றை தடுப்பதற்காகவும், அனைத்து பயணிகள் பாதுகாப்புக்காகவும் பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து விதிமுறைகளையும் பயணிகள் பின்பற்றி, நிறுவனத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மெட்ரோ ரயில் நிறுவனம் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.